முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்**

**மட்டம் II பரீட்சை – 2020 யூலை**

# (204) வியாபார முகாமைத்துவம்

(Business Management)

2020-10-04
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** றொபேட் எல். காட்ஸ் (Robert L. Katz) இனால் அறிமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவத் திறன்களைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) தொடர்பாடல் திறன்கள், எண்ணக்கருத் திறன்கள், தீர்மானமெடுத்தல் திறன்கள்

(2) எண்ணக்கருத் திறன்கள், தனிமனிதத் திறன்கள், தொழினுட்பத் திறன்கள்

(3) தீர்த்தல் திறன்கள், தொழினுட்பத் திறன்கள், தொடர்பாடல் திறன்கள்

(4) தொழினுட்பத் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள்

**1.2** நிறுவனமொன்றிற்கு ஊழியர் ஒருவரை முறையாக அறிமுகப்படுத்துகின்ற செயன்முறை:

(1) பயிற்சியளித்தல்
(2) தொழிலுக்கு அறிமுகப்படுத்தல்
(3) வாடகைக்கமர்த்தல்
(4) தெரிவுசெய்தல்

**1.3** பின்வருவனவற்றுள் போட்டரின் பெறுமதிச் சங்கிலியின் ஒரு முதன்மை நடவடிக்கையாக (primary activity) அமைவது எது?

(1) செயற்பாடுகள் (operations)
(2) பெறுகை (procurement)
(3) மனித வள முகாமை
(4) உட்கட்டமைப்பு

**1.4** பின்வருவனவற்றுள் ஒரு வெற்றிகரமான பண்டக்குறி (brand) க்கான ஒரு தேவைப்பாடாக **அமையாதது** எது?

(1) தொடர்புடையதன்மை (2) தெளிவானதன்மை

(3) ஒத்திசைவானதன்மை (4) நெகிழ்ச்சியானதன்மை

**1.5** பின்வருவனவற்றுள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் ஒரு கூறாக (element) அமைவது எது?

(1) செயற்பாடுகள் (2) கொள்வனவு செய்தல்

(3) ஒருங்கிணைத்தல் (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

***1.6** முதல் **1.10** வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.6** நிறுவன இலக்குகளை அடைவதற்கு உள்ளீடுகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய விபரிப்பு வினைத்திறன் எனப்படுகிறது. எளிமையாகக் கூறுவதாயின் வினைத்திறன் என்பது ....................... *(சரியான செயல்களைச் செய்வது / செயல்களைச் சரியாகச் செய்வது)* ஆகும்.

**1.7** வெற்றிகரமான மாற்றம் ஒன்றின் ஒரு அளவுரு (parameter) ....................... *(வளங்கள் / உறுதியின்மை)* ஆகும்.

**1.8** ....................... *(வேலைப் பகுப்பாய்வு / வேலை வடிவமைப்பு)* என்பது நிறுவனத்தின் ஒரு வேலை அலகினுள் பணிகள், கடமைகள், பொறுப்புக்கள், தனிமனித உறவுகள் மற்றும் தொழினுட்பவியல் போன்ற தீர்மானக் காரணிகளின் செயன்முறை ஆகும்.

**1.9** வழங்குநரிடமிருந்தான செல்வாக்கானது மாற்றத்தின் ....................... *(ஒரு வெளிவாரியான / ஓர் உள்வாரியான)* காரணியாகக் கருதப்படுகிறது.

**1.10** ....................... (சந்தைப்படுத்தல் / *விற்பனை செய்தல்)* எண்ணக்கருவில், பொருட்களின் தரம் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது பொருட்கள் தீவிரமாக விற்பனை செய்யப்படுகின்றன. (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

***1.11** முதல் **1.15** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில், உற்பத்திக்கு முந்திய நடவடிக்கைகள் இரண்டினை (02) நிரற்படுத்துக.

**1.12** பயனுறுதிவாய்ந்த சந்தைத் துண்டமாக்கலுக்கான தேவைகள் இரண்டினை (02) நிரற்படுத்துக.

**1.13** நிறுவனமொன்றிற்கு உள்ளகரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.14** மாற்றத்திற்கு (change) தடைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.15** மொத்த தர முகாமைத்துவக் (TQM) கோட்பாடுகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

முகாமைத்துவமானது பல்வேறு காரணங்களால் வியாபார நிறுவனங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இது பௌதிக, நிதி மற்றும் மனித வளங்களை வழிப்படுத்தி, ஒருங்கிணைத்து, கட்டுப்படுத்துவதன் மூலம் நிறுவன இலக்குகளை அடைவதற்கு உதவி செய்கிறது. வளங்களின் வினைத்திறனானதும் பயனுறுதிமிக்கதுமான பயன்பாடானது விரயத்தைக் குறைப்பதற்கும் செலவைக் குறைப்பதற்கும் வழிவகுக்கிறது. மேலும் அது நிறுவனத்தின் இலாபத்தை அதிகரிக்கவும் வழிவகுக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) முகாமைத்துவச் செயன்முறையின் நான்கு (04) தொழிற்பாடுகளை (functions) **இனங்காண்க.**

(04 புள்ளிகள்)

(b) கொவிட் - 19 உலகளாவிய தொற்றுப் பரவல் காரணமாக, தற்போதைய வியாபாரச் சூழலில் முகாமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ஜோன்** என்பவர் ஐரோப்பிய சந்தைக்கு ஆடைகளைத் தயாரிக்கின்ற **ஹம்மா (பிரை.) லிமிட்.** இல் புதிதாக நியமிக்கப்பட்ட மனித வள முகாமையாளர் ஆவார். மனித வளப் பிரிவின் செயல்திறனற்ற நடவடிக்கைகள் காரணமாக, மிகக் குறுகிய காலத்தினுள், அண்மையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களில் பெரும்பாலானோர் நிறுவனத்திலிருந்து விலகிச் சென்றிருந்ததை அவர் வேலைக்குச் சேர்ந்து முதல் மாதத்தினுள்ளேயே அவதானித்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மனித வள முகாமைத்துவத்தின் நான்கு (04) தொழிற்பாடுகளைக் (functions) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(b) வேலை விபரிப்பு (Job Description - JD) மற்றும் வேலை குறித்துரைப்பு (Job Specification - JS) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்றிற்கு மனித வள முகாமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக, நாடு பல மாதங்களாக முடக்கப்பட்டிருந்தது. இதனால் நிறுவனங்கள் தமது பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளையும் சமூக ஊடகங்கள் மற்றும் சமூக வலையமைப்புகள் போன்ற டிஜிடல் வழிமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொண்டிருந்தன. இதனால் அதிகளவான நிறுவனங்கள் தங்களுடைய சந்தை நடவடிக்கைகளை டிஜிடல் வழிமுறைக்கு நகர்த்தியிருந்தன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) டிஜிடல் சந்தைப்படுத்தலின் நான்கு (04) நன்மைகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) எந்தவொரு வியாபார நிறுவனத்திற்கும் சந்தைப்படுத்தல் ஏன் முக்கிய தொழிற்பாடொன்றாகக் கருதப்படுகிறது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

நிறுவனங்கள் தமது சொந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் எதிர்வினையாற்றுவதைவிடவும் அதிக செயல்திறனுடையதாக இருப்பதற்கு மூலோபாயம் வழியமைக்கிறது. நிறுவனங்கள் தமது எதிர்காலத்தை வலுவாக்குவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்றுகின்றன. மூலோபாயமானது உள்ளகச் சூழலை வெளிவாரிச் சூழலுடன் சீரமைப்பதற்கு நிறுவனங்களை வழிப்படுத்துகின்ற அதேவேளை நிறுவனத்தின் ஆயுட்காலத்தினுள் அதன் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் வழிப்படுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நிறுவனமொன்றில் காணப்படக்கூடிய மூலோபாயங்களின் (strategies) வகைகள் இரண்டினை (02) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றின் மூலோபாயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற (Influence) வெளிவாரிக் காரணிகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) சிறந்த மூலோபாயம் ஒன்றின் பண்புகள் (characteristics) இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

தற்போது, நிறுவனங்கள் அதிக சுறுசுறுப்புமிக்க சூழலில் இயக்கப்படுகின்றன. அத்தகைய சுறுசுறுப்பு நிலைக்கு முகங்கொடுப்பதற்காக, நிறுவனங்கள் அவற்றிற்கு மிகவும் பொருத்தமான நிறுவனக் கட்டமைப்பொன்றை ஏற்றுப் பின்பற்றுவது எந்தவொரு நிறுவனத்திற்கும் முக்கியமானதாகும். தவறான கட்டமைப்பு நிறுவனத்தின் செயற்பாட்டில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) சிறந்த நிறுவனக் கட்டமைப்பொன்றின் அனுகூலங்கள் இரண்டினையும் (02) மோசமான முறையில் வடிவமைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பின் பிரதிகூலங்கள் இரண்டினையும் (02) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) நிறுவனக் கட்டமைப்பொன்றை வடிவமைப்பதில் தாக்கம் செலுத்துகின்ற (affecting) காரணிகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) தொழிற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பொன்றின் அனுகூலங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**குளோவ் பெக் (Glove Pack)** என்பது உள்நாட்டுச் சந்தைக்கு விசேடமாக ஓட்டோமொபைல், நிருமாணம், சுகாதாரப் பராமரிப்பு போன்ற வேறுபட்ட உள்நாட்டுத் தொழில்துறைக்கு ஒரு வகைக் கையுறைகளைத் தயாரிக்கின்ற வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு நடுத்தர அளவு உற்பத்திக் கம்பனியாகும். **குளோவ் பெக்** கம்பனியின் தாபகரும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் உள்ள **திரு. பெரேரா** அவர்கள் 2000 ஆம் ஆண்டில் இவ் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வியாபாரத்தின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்துள்ளார்.

2020 இன் முற்பகுதியில், வியாபார நடவடிக்கைகள் **திரு. பெரேராவின்** மகனான **ராயன்** என்பவரிடம் கையளிக்கப்பட்டன. **ராயனின்** நீண்டகால வியாபார இலக்காக, ஐரோப்பிய சந்தைக்கு **குளோவ் பெக்** கம்பனியின் செயற்பாடுகளை விரிவாக்குவதென்பது காணப்படுகிறது.

**குளோவ் பெக்** ஆனது எப்போதும் தாம் தயாரிக்கின்ற பொருட்களின் தரம்மீது கவனஞ் செலுத்துவதால், அவர்களால் உயர் திருப்தியும் விசுவாசமும் கொண்ட வாடிக்கையாளர் தளமொன்றைக் கட்டியெழுப்ப முடிந்திருந்தது. எவ்வாறாயினும், விற்பனையின் அளவு அதிகரித்திருந்தபோதிலும் கணிசமானளவு இலாபத்தை கம்பனியால் ஈட்ட முடியவில்லை. வாடிக்கையாளர்களின் திருப்தியைப் பேணுகின்ற அதேவேளை இலாபத்தை அதிகரிப்பதில் பிரதான கவனஞ் செலுத்தி, புதிதாக விருத்தி செய்யப்பட்ட மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் கம்பனியினால் ஒரு புதிய கட்டுப்பாட்டு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதற்கிடையில், தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளரான **ரயான்** இனால் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

- பெரும்பாலான ஊழியர்களிடம் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு முறைமை பற்றியோ, அதன் நோக்கம் பற்றியோ விளக்கம் காணப்படவில்லை.
- பெரும்பாலான ஊழியர்களிடம் பணி பற்றிய ஊக்கமின்மை காணப்படுகிறது.
- நிறுவனத்தினுள் பயனுறுதிமிக்க தொடர்பாடல் முறைமை காணப்படவில்லை.

மேற்படி பாதகமான விடயங்களுக்கான ஒரு தீர்வாக, புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு முறைமை தொடர்பில் ஊழியர்களுக்கு அறிவூட்டுவதற்காக வேலைப்பட்டறை ஒன்றை நடத்துவதற்கு உயர் மட்ட முகாமை திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) பயனுறுதிவாய்ந்த தலைவர் (effective leader) ஒருவரின் தொழிற்பாடுகள் (functions) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **குளோவ் பெக்** கம்பனிக்கு, கட்டுப்படுத்தலானது முக்கியமானதாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் நான்கினை (04) **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(c) நிறுவனத்தினுள் காணப்படும் தொடர்பாடல் தடைகளை வெற்றிகொள்வதற்கு **குளோவ் பெக்** கம்பனியின் முகாமையால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) ஊழியர்கள் ஊக்கமின்றி இருப்பதைக் காட்டும் மூன்று (03) அறிகுறிகளை (signs) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(e) திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை (relationship) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |